මගේ අංකය / எனது இல. / My No. } ஓய்வூதிய அறிவுறுத்தல் கடித இலக்கம் 11/2021

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ..........................

දිනය / திகதி / Date } 2021.09.10

முப்படைத் தளபதிகள்
அனைத்து மாவட்ட செயலாளர்கள்
அனைத்து பிரதேச செயலாளர்கள்

**<u>அங்கவீனமுற்ற முப்படை இராணுவ ஊழியர்கள் மற்றும் விதவைகள்/ தபுதாரர்களுக்கு ரணவிரு சுரக்கும் கொடுப்பனவினை வழங்குதல்</u>.**

ஓய்வூதிய சுற்றறிக்கை இல. 01/2017 இன் ஊடாக பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக அங்கவீனமுற்ற முப்படை இராணுவ அங்கத்தவர்கள் மற்றும் இறந்த முப்படை இராணுவ அங்கத்தவர்களின் விதவைகளுக்கு ரணவிரு சுரக்கும் கொடுப்பனவினை பெற்றுக்கொடுப்பதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

02. அச் சுற்றறிக்கையின் (i), (ii) மற்றும் (iii) ஆம் பிரிவுகளின் கீழ் தகுதி பெற்ற அங்கவீனமுற்ற முப்படை இராணுவ அங்கத்தவர்களுக்கு MOD/DEF/GS/SALW/4/SLA(I) இலக்க 2019.09.24 ஆம் திகதிய பாதுகாப்பு அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் 2019.09.24 ஆம் திகதி முதல் மற்றும் விதவைகள்/ தபுதாரர்களுக்கு MOD/01/2021 இலக்க 2021.05.18 ஆம் திகதிய பாதுகாப்பு அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் 2021.04.27 ஆம் திகதி முதல் நிலையான மாதாந்த கொடுப்பனவு வழங்குவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்குறிப்பிடப்பட்ட திகதிகள் முதல் சுரக்கும் கொடுப்பனவு வழங்குதல் நிறுத்தப்பட்டுள்ளது.

03. பல்வேறு நிர்வாக பிரச்சனைகள் காரணமாக ஓய்வூதிய திணைக்களத்திற்கு 2019.09.24 ஆம் திகதிக்கு முன்னர் சுரக்கும் கொடுப்பனவு விண்ணப்பப்படிவங்களை சமர்பிக்காத ஊனமுற்ற முப்படை இராணுவ ஊழியர்கள் மற்றும் 2021.04.27 ஆம் திகதிக்கு முன்னர் சுரக்கும் கொடுப்பனவு விண்ணப்பப்படிவங்களை சமர்பிக்காத இறந்த முப்படை இராணுவ அங்கத்தவர்களின் விதவைகள்/ தபுதாரர்களுக்கு சுரக்கும் கொடுப்பனவு நிலுவையினை பெற தகுதி உண்டு என்பதுடன் நிலுவை தொகை கொடுப்பனவு தொடர்பான அறிவுறுத்தல்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன.

04. மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகளின் படி, சுரக்கும் கொடுப்பனவுக்கு தகுதியான இராணுவ ஊழியர்கள் மற்றும் இறந்த இராணுவ ஊழியர்கள் 55 வயதில் பெறும் சம்பள விபரங்களுடன் சுரக்கும் கொடுப்பனவுக்கான வேண்டுகோள் முப்படை இராணுவத்தினால் ஓய்வூதியம் வழங்கப்படும் பிரதேச செயலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். பிரதேச செயலாளரினால் ரணவிரு சுரக்கும் கொடுப்பனவு நிலுவையினை பெறுவதற்கான விண்ணப்பங்கள் AR இன் கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அங்கு Reason ஆக Forces Surakum Allowance Arrears தெரிவு செய்ய வேண்டும். 55 வயதில், திருத்தப்பட்ட ஓய்வூதிய கொடைப் பத்திரம் மற்றும் கணக்கீட்டு ஆவணங்கள் இணைப்புகளாக இணைக்கப்பட வேண்டும்.

05. ரணவிரு சுரக்கும் கொடுப்பனவு வழங்கப்பட்ட பின்னர், அது குறித்த அறிக்கை ஓய்வூதிய கோப்பில் சேர்க்கப்பட வேண்டும் என்பதுடன் அதன் பிரதி ஓய்வூதியருக்கு வழங்க வேண்டும்.

06. ரணவிரு சுரக்கும் கொடுப்பனவு வழங்குவதற்கான ஒதுக்கீடுகள் 2021 ஆம் ஆண்டுடன் முடிவடைவதால் 2021.12.31 ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து நிலுவை கொடுப்பனவுகளை செலுத்தி முடிக்குமாறு தயவுடன் அறியத்தரப்படுகிறது.

**ஒப்பம்.**
**ஏ.ஜகத் டீ.டயஸ்**
ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம்

பிரதிகள்

1. ஜனாதிபதியின் செயலாளர் - த.த.த.
2. பிரதமரின் செயலாளர் - த.த.த.
3. செயலாளர், நிதி அமைச்சு - த.த.த.
4. செயலாளர், பாதுகாப்பு அமைச்சு - த.த.த.
5. செயலாளர், அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு - த.த.த
6. கணக்காய்வாளர் நாயகம் - த.த.த

- உ.ந.எ